# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>

**முன்னிலை: திருமதி.பி.கே.தமயந்தி,எம்,ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சேந்தமங்கலம்.**

**2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29 ம் நாள் வியாழக்கிழமை**

**<u>இ.ம.எண். 4/2022 in அ.வ.எண்.16/2022</u>**

1. கணேசன்
2. சங்கர்குமார்
3. அன்பழகன்
4. பழனியாண்டி
5. சுப்பராயகவுண்டர்
6. பெரியசாமி
7. செந்தில்குமார் . . . **மனுதாரர்கள்/1 முதல்7 பிரதிவாதிகள்**

**//எதிராக//**

லோகாம்பாள் . . . **எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனுவானது என்முன்பு 05.02.2024 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/1 முதல்7 பிரதிவாதிகள்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.பழனிசாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.T.மதுமதி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள்தரப்பில் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, மேற்படி நெம்பர் மனுவில்கமிஷனர் ஒருவரை நியமனம் செய்து மனுசொத்தை தகுதிவாய்ந்த

சர்வேயர் உதவியுடன் அளவீடுசெய்து அளவு வரைபடமும், அறிக்கையும் தாக்கல் செய்ய உத்திரவிட வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுதாரர்கள்/1 முதல்7 பிரதிவாதிகள்தரப்பு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்/2 ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரத்தில், மனுதாரர் அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி. 1 மற்றும் 3 முதல் 7 எதிர்னுமனுதாரர்களுக்கும் சேர்த்து இம்மனுவை முன்னின்று தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாவா தாக்கல் செய்துள்ளார். மனுசொத்தானது சிதம்பரப்பட்டி கிராமத்தில் உள்ளது. மேற்படி சொத்தானது கடகால் ஆற்றுக்கு தென்புரம் உள்ள சொத்தாகும். மேற்படி மனுசொத்தான இந்த மனுவின் எதிர்மனுதாரர் சொத்திற்கும் மேலே கண்ட கடகால் ஆற்றுக்கும் இடையே 20 அடி அகல கடகால் ஆற்றுகரை அமைந்திருந்தது. மேற்படி கரையின் வழியாக இம்மனுவின் மனுதாரர்கள் மற்றும் ஊர்பொதுமக்கள் ஆள், ஆடு, மாடு, வண்டி மாடு, ஆட்டோக்கள் மற்றும் டிராக்டர்கள் ஓட்டிச்சென்று அனுபவித்து வந்தனர். இம்மனுவின் மனுதாரர்கள் மனுசொத்திற்கு மேற்குபுறம் ஏரிக்கரையின் வழியாக வந்து பின்பு கிழபுறம் திரும்பி கிழமேலாக செல்லும் கடகால் கரையின் பாதை வழியாகச் சென்று ஆள், ஆடு,மாடு, வண்டி மாடு, ஆட்டோக்கள் மற்றும் டிராக்டர்கள் எடுத்துச்சென்று கடகால் ஆற்றில் இறங்கி அதன் வடபுறம் உள்ள இம்மனுவின் மனுதாரர்கள் சொத்திற்கு சென்று அவரவர்கள் நிலங்களை அவரவர்கள் உழவடை செய்து வேண்டும் மகசூல் வைத்து அனுபவம் செய்து வந்தனர். அதேபோல் அப்பகுதி

ஊர்மக்கள் கடகால் ஆற்றின் கரையில் வந்து பின்பு தென்புறம் திரும்பி ஏரிக்கரையின் வழியாக வந்து இந்த எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு தென்புறம் உள்ள கருப்பண்ணார் கோவில் ரோட்டை அடைந்து கோவிலுக்கு சென்று அனுபவம் செய்து வந்தனர். இந்நிலையில் வாதி மற்றும் அவரது கணவர் உயிரோடு இருக்கும் சமயத்திலேயே இருவரும் சேர்ந்து மேற்படி இம்மனுவின் எதிர்மனுதாரர்/வாதியின் நிலத்திற்கும் வடபுறம் இருந்த கடகால் ஆற்றுகரையை 10.01.2021 தேதியில் ஆக்கிரமிப்பு செய்து வாதி அவரது கணவர் ஆகியோர் அவர்களது நிலத்துடன் சேர்த்துக்கொண்டனர். இந்நிலையில் இம்மனுவின் மனுதாரர்கள் மற்றும் ஊர்பொதுமக்கள் சேர்ந்து 8ம் பிரதிவாதியான ஊராட்சித்தலைவர் சிவியாம்பாளையம் அவர்களிடமும் மற்றும் சிவியாம்பாளையம் கிராமநிர்வாக அலுவலரிடமும் புகார் கொடுத்ததன் பேரில் மேற்படி நபர்கள் இந்த மனுச்சொத்தை அளவீடு செய்து ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக நிலஅளவையர்க்கு மனு கொடுத்து சிவியாம்பாளையம் பஞ்சாயத்து தலைவரை வைத்து அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நிலையில் இம்மனுவின் எதிர்மனுதாரரின் கணவர் இறந்துவிட்டார். பின்னிட்டு அளவீடு செய்ய எதிர்மனுதாரர்/வாதி ஒத்துவரவில்லை. எதிர்மனுதாரர்/வாதி அவரது சொத்திற்கு வடபுறம் இருந்த கடகால் ஏரிக்கரையில் 20 அடி அகலத்தில் சுமார் 300 அடி நீளத்திற்கு கரையை ஆக்கிரமிப்பு செய்துவிட்டனர். அதேபோல் மனுசொத்தில் மேற்குபுறம் உள்ள ஏரிக்கரையில் 10 அடி அகல 250 அடி நீளத்தில் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார். மேற்படி நிலத்தை அளவீடு செய்தால் உண்மை சங்கதிகள் வெளிப்பட்டுவிடும் என்பதற்காக தற்சமயம் பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கு

தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருப்பதால் அளவீடு செய்யக்கூடாது என வாதி தடைசெய்து வருகிறார். மேற்படி தாவாவிலும் வாதி உண்மையான சங்கதிகளை கூறாமல் பொய்யான சங்கதிகளைகூறி இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலையில் மேற்படி மனு சொத்தை அளவீடு செய்வதன் மூலம் உண்மை சங்கதிகளை கூறி இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலையில் மேற்படி மனு சொத்தை அளவீடு செய்வதன் மூலம் உண்மைசங்கதிகளை சமூகம் கோர்ட்டுக்கு தெரியப்படுத்துவதுடன் வாய்மொழி சாட்சியத்தை இந்த மனுதாரர்களால் குறைத்துக்கொள்ள இயலும். மேற்படி மனுசொத்தை அளவீடு செய்யாவிடில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். இம்மனுவின் மனுதாரர்களுக்கு நல்ல கட்சி உள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் அவர்கள் நிலங்களுக்கு செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே மேற்படி மனுவில் கமிஷனர் ஒருவரை நியமனம் செய்து மனுசொத்தை தகுதிவாய்ந்த சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அறிக்கையும், அளவு வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிட்டு மனுவை அனுமதிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிர்மனுதாரர்/வாதிதரப்பு எதிர்மனுஉரையின் சுருக்கம்:-</u>

எதிர்மனுஉரையில், மனுதாரர்கள் தாவாசொத்தான கடகால் ஆற்றுக்கரையின் வழியே மனுதாரர்களும் ஊர்பொதுமக்களும் பாதை அனுபவித்து வருகிறார்கள் என்பது சுத்தப்பொய்யாகும். அக்கரையின் வழியே எவர் ஒருவரும் பாதைபாத்தியம் அனுபவித்தது இல்லை. மேலும் தாவாசொத்தில் பாதை இருப்பதும் அதில்

மனுதாரர்களின் அனுபவம் உள்ளது என்பதைக்காட்ட தாக்கல் செய்திருக்கும் ஆணையர் நியமனம் கோரிய மனுவானது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல. அசல் வழக்கானது ஏரிக்கரையினை அழித்து கடகால் ஆற்றின் குறுக்கே புதியதாக தடம் அமைக்ககூடாது என்பதற்குதான். ஆனால் மனுதாரர்கள், இவ்வெதிர்மனுதாரர் கரையை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற அளவீடு செய்ய வேண்டும் என்பது உள்நோக்கமாக கொணடு இந்த ஆணையர் நியமனம் கோரும் மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கில் தீர்மானிக்கக்கூடிய அம்சம் புதியதாக தடம் அமைக்ககூடாது என்பதே. ஆனால் மனுதாரர்கள் இவ்வெதிர்மனுதாரர் ஏரிக்கரையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் அதனை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ள விஷயம் இவ்வழக்கில் தீர்மானிக்க இயலாது. அவ்வாறு ஆக்கிரமிப்பு உள்ளதா இல்லையா என்பதை குறித்து மனுதாரர்கள் வேறு நடவடிக்கைதான் எடுக்க வேண்டுமே தவிர இந்த வழக்கில் அதனை தீர்மானிக்க இயலாது அதனால் இம்மனுவானது தேவையற்றதாகிறது. ஆகவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5.** வழக்காவணங்களை ஆராய்ந்துபார்க்கும்போது, அசல் வழக்கானது கடந்த 16.02.2022 தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதிதரப்பில் தாவா R, R1 ஏரியின் கரையை அழித்து L கடகால் ஆற்றின் வழியே புதிதாக தடம் அமைக்கக்கூடாது என்று பிரதிவாதிகள் பேரில் நிரந்தரஉறுத்துக்கட்டளை பிறப்பிக்ககோரியும், செலவுதொகைக்கும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் நாளதுவரை வழக்கெழுவினா வனையப்படவில்லை. அசல் வழக்கு வழுக்கெழுவினா வனைவதற்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளது.

**6.** இவ்வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில், நீதிமன்றஆணையர் தகுந்த சர்வயேர் உதவியுடன் மனுசொத்தை அளவீடு செய்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்தரப்பில் 10.01.2021 தேதியில் எதிர்மனுதாரர்/வாதியின் நிலத்திற்கு வடபுறமிருந்த கடகால் ஆற்றுக்கரையை ஆக்கிரமிப்பு செய்து வாதியும் அவரது கணவரும் அவர்களது நிலத்துடன் சேர்த்துக்கொண்டனர் என்று கூறப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள்தரப்பில் இவ்வழக்கில் எதிர்கோரிக்கை (Counter claim) மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர்/வாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள தாவாவில், தாவாசொத்தின் அளவீடு குறித்து பிரச்சினை உள்ளதாக கூறப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர்/வாதிதரப்பில் தாவா R, R1 ஏரியின் கரையை அழித்து L கடகால் ஆற்றின் வழியே புதிதாக தடம் அமைக்கக்கூடாது என்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பேரில் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சங்கதிகளில் அளவீட்டுப் பிரச்சினை உள்ளதாக

எதிர்மனுதார்/வாதிதரப்பில் தாவா பிராதில் கூறப்படாத நிலையில் இவ்வழக்கு பிரச்சினையை தீர்க்க நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிர்மனுதாரர்/வாதியின் நிலத்திற்கு வடபுறமிருந்து கடகால் ஆற்றுக்கரையை 10.01.2021 தேதியில் ஆக்கிரமிப்பு செய்து வாதி மற்றும் அவரது கணவர் அவர்களுடைய நிலத்தில் சேர்த்துக்கொண்டுள்ளதாக கூறப்பட்டுள்ள சங்கதிகளை பொறுத்து இவ்வழக்கில் தீர்மானிக்க இயலாது என்ற எதிர்மனுதாரர்/வாதிதரப்பு வாதம் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. மேலும் ஆக்கிரமிப்பை பொறுத்து எதிர்மனுதாரர் பேரில் மனுதாரர்கள் தரப்பில் வேறு நடவடிக்கை எடுக்க இயலுமே தவிர இவ்வழக்கில் தீர்மானிக்க இயலாது என்ற எதிர்மனுதாரர்தரப்பு வாதம் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது.

7. வழக்குரை சங்கதிகளின் அடிப்படையில் பார்க்கும்போது, தாவாசொத்தில் அளவீட்டுப் பிரச்சினை எதுவும் ஏற்பட்டுள்ளதாக சங்கதிகள் கூறப்படவில்லை. மேலும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்கோரிக்கை மனு எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் தாவாசொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனுதாரர்களின் மனுவில் தகுநிலை இல்லை என்றும், மனுதாரர்களின் மனுவை அனுமதிக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்களின் மனுவை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2024ம் வருடம் பிப்ரவரி மாதம் 29ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.03.01 17:11:29 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. **மனுதாரர்கள்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** **இல்லை.**

2. **எதிர்மனுதாரர்கள்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–** **இல்லை.**

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.03.01 17:11:36 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண்.4/2022
in
அ.வ.எண்.16/2022
நாள்: 29.02.2024.